**கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை**

**கலைப் பீடம்**

**முதலாம் வருடக் கலைமாணிப் பரீட்சை, அரையாண்டு I – 2023/2024**

**SOC 1101 – சமூகவியலின் அடிப்படைகள்**

நேரம்: **இரண்டு (02)** மணித்தியாலங்கள்

எவையேனும் **நான்கு (04)** வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1.

i. 'சமூகக் கட்டமைப்பினை' வரையறுக்குக. (2 புள்ளிகள்)

ii. கட்டமைப்புக் கோட்பாடு ஒன்றின் பிரதான வியூகம் என்ன? உதாரணம் ஒன்றைப் பயன்படுத்தி விளக்குக. (3 புள்ளிகள்)

iii. குறிப்பிட்ட ஒரு சமூகத் தோற்றப்பாட்டினைப் (social phenomenon) பகுப்பாய்வு செய்யும் சமூகவியலாளர் ஒருவருக்குச் சமூகக் கட்டமைப்பானது (social structure) எவ்வாறு முக்கியமான ஓர் எண்ணக்கருவாகக் காணப்படுகின்றது என்பதனை ஓர் உதாரணத்துடன் விளக்குக. (10 புள்ளிகள்)

2.

i. ஒரு நோக்குநிலை (perspective) என்றால் என்ன? வரையறுக்குக. (2 புள்ளிகள்)

ii. செயற்பாட்டுவாதம் (Functionalism) ஓர் ஒருமைப்பாட்டுக் கோட்பாடாகக் (consensus theory) கருதப்படுவது ஏன்? (3 புள்ளிகள்)

iii. முரண்பாட்டுவாத நோக்குநிலையின் (Conflict perspective) பிரதான பண்பியல்புகளைக் கோடிட்டுக்காட்டி, ஒரு சமூகத் தோற்றப்பாட்டினை (social phenomenon) ஒரு முரண்பாட்டுவாதக் கோட்பாட்டாளர் எவ்வாறு பகுப்பாய்வு செய்வார் என்பதனை ஓர் உதாரணத்துடன் விளக்குக. (10 புள்ளிகள்)

3. i. விஞ்ஞான முறைமையின் படிநிலைகள் எவை? (2 புள்ளிகள்)

ii. ஒரு நிகழ்தகவு மாதிரியினைத் (probability sampling) தெரிவு செய்வதற்கு ஒரு மாதிரிச் சட்டகம் (sampling frame) ஏன் தேவைப்படுகின்றது? (3 புள்ளிகள்)

iii. நீங்கள் எச்.ஐ.வியுடன் (HIV) வாழும் மக்களைப் பற்றிய பண்புசார் ஆய்வொன்றினைச் (qualitative study) செய்வதற்கு விரும்புகின்றீர்கள் என்று கருத்திற்கொள்க. உங்கள் ஆய்வுக்கான மாதிரியை எவ்வாறு தெரிவுசெய்வீர்கள், ஆய்வுத் தரவுகளைச் சேகரிக்க எவ்வாறான நுட்பங்களைப் பயன்படுத்துவீர்கள், மற்றும் அத்தகைய ஆய்வில் நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டிய ஆய்வு ஒழுக்கம் (ethics) குறித்த நியாயப்படுத்துதல்களை வழங்கி அதனை நிருபிக்கும் வகையில் ஒரு சிறு கட்டுரை எழுதுக. (10 புள்ளிகள்)

4. i. மக்ஸ் வெபரைப் (Max Weber) பொறுத்தவரையில், விஞ்ஞானத்திற்கு இருக்கவேண்டிய முக்கிய இரண்டு பண்பியல்புகள் எவை? (2 புள்ளிகள்)

ii. மக்ஸ் வெபர் ஏன் ஓர் உண்மை மாதிரி வடிவத்தை (ideal type) அறிமுகப்படுத்தினார்? காரணங்கள் தருக. (3 புள்ளிகள்)

iii. ஒரு செயற்திறன்மிக்க நிறுவன வடிவமாகப் பணிக்குழுவாட்சி முறைமையினை (bureaucracy) மக்ஸ் வெபர் (Max Weber) ஏன் கருதினார்? உங்களது விடையினை விமர்சன ரீதியாகக் கருத்துரைக்குக. (10 புள்ளிகள்)

5.

i. குறியீட்டு இடைவினைவாதத்தின் விருத்திக்குப் பங்களிப்புச்செய்த இரண்டு கோட்பாட்டாளர்களின் பெயர்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii. *Asylums* என்ற நூலை எழுதியவர் யார்? இந்நூலில் எந்தக் குழுவினைப் பற்றி எழுதப்பட்டுள்ளது? (3 புள்ளிகள்)

iii. ஜி. எச் மீட் இனைப் (G.H Mead) பொறுத்த வரையில், "அர்த்தமுள்ள உலகில் மனிதன் வாழ்கின்றான்". இக்கூற்றினை உதாரணங்களுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

6. i. மெல்போர்ட் ஸ்பிரோவின் (Melford Spiro) மதம் பற்றிய வரைவிலக்கணத்தின் முக்கிய கருத்துக்கள் எவை? (2 புள்ளிகள்)

ii. 'மதச்சார்பின்மையினைச் (Secularization)' சுருக்கமாக விபரிக்குக. (3 புள்ளிகள்)

iii. மக்ஸ் வெபரின் (Max Weber) கருத்துப்படி, கீழைத்தேயத்திற்கு முன்னதாக மேலைத்தேயத்தில் முதலாளித்துவம் தோன்றியதற்குப் புரட்டஸ்தாந்து மத ஒழுக்கம் எவ்வாறு பங்களிப்புச் செய்தது? கருத்துரைக்குக. (10 புள்ளிகள்)

7.

i. சமூக நகர்வு (social mobility) என்றால் என்ன? (2 புள்ளிகள்)

ii. பால் மற்றும் பால்நிலை (sex and gender) என்பவற்றிற்கு இடையிலான அடிப்படை வேறுபாடுகளை விளக்குக. (3 புள்ளிகள்)

iii. 'குடும்பத்தின் முதன்மைப் பராமரிப்பாளர்களாகப் (primary caregiver) பெண்கள் முக்கிய வகிபங்கு வகிக்கின்றனர். அவளுடைய முதன்மைப் பொறுப்புக்களை நிறைவேற்றுகையில் அது அவளது ஏனைய சமூக வகிபங்குகளை (social roles) எவ்வாறு செய்கின்றாள் என்பதற்குச் சில மட்டுப்படுத்தல்களை அறிமுகஞ் செய்கின்றது'. இக்கூற்றுடன் நீங்கள் உடன்படுகின்றீர்களா? உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

8. பின்வரும் சமூகவியல் எண்ணக்கருக்களை விளக்குக.

i. ஆய்வை மேற்கொள்வதிலுள்ள ஒழுக்கவியல் சிக்கல்கள் (Ethical Dilemmas in conducting research) (5 புள்ளிகள்)

ii. சமூக இடைவினையின் நாடகவியல் கோட்பாடு (Dramaturgical theory of social interaction)

(5 புள்ளிகள்)

iii. ஒத்துணர்வு (Empathy) (5 புள்ளிகள்)

********************